## அக்டோபர் – 21 – பொதுக்கால 29ம் ஞாயிறு “

### உங்களுள் முதன்மையாளராக இருக்கவிரும்கிறவர் பணியாளராக இருக்கட்டும்’’ (மாற்.10:44)

**முதல் வாசகம் : ஏசாயா 53 : 10 - 11**

அந்நாட்களில் ஆண்டவரின் துன்புறும் ஊழியரை நொறுக்கவும் நோயால் வதைக்கவும் ஆண்டவர் திருவுளம் கொண்டார் அவர் தம் உயிரைக் குற்றநீக்கப்பலியாகத் தந்தார் எனவே, தம் வழிமரபு கண்டு நீடுவாழ்வார் ஆண்டவரின் திருவுளம் அவர் கையில் சிறப்புறும். அவர் தம் துன்ப வாழ்வின் பயனைக்கண்டு நிறைவடைவார் நேரியவராகிய என் ஊழியர் தம் அறிவால் பலரை நேர்மையாளராக்குவார் அவர்களின் தீச்செயல்களைத் தாமே சுமந்து கொள்வார்.

**பதில்பாடல் :** உம்மையே நாங்கள் நம்புவதால் உம் பேரன்பு எம்மீது இருப்பதாக.

**இரண்டாம் வாசகம் : ஏபியேர் 4 : 14 – 16**

சகோதர சகோதரிகளே! வானங்களைக் கடந்து சென்ற இறைமகனாகிய இயேசுவை நாம் தனிப்பெரும் தலைமைக் குருவாகக் கொண்டுள்ளதால் நாம் அறிக்கையிடுவதை விடாது பற்றிக்கொள்வோமாக! ஏனெனில், நம் தலைமைக்குரு நம்முடைய வலுவின்மையைக்கண்டு இரக்கம் காட்ட இயலாதவர் அல்ல் மாறாக, எல்லா வகையிலும் நம்மைப்போலச் சோதிக்கப்பட்டவர் எனினும் பாவம் செய்யாதவர்.எனவே, நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்றவேளையில் உதவக்கூடிய அருளைக் கண்டடையவும், அருள் நிறைந்த இறை அரியணையைத் துணிவுடன் அணுகிச் செல்வோமாக..

**நற்செய்தி : மாற்கு 10 : 35 - 45**

அக்காலத்தில் செபதேயுவின் மக்கள் யாக்கோபும், யோவானும் இயேசுவை அணுகிச்சென்று அவரிடம், ”போதகரே, நாங்கள் கேட்பதை நீர் எங்களுக்குச் செய்யவேண்டும் என விரும்புகிறோம்” என்றார்கள்.அவர் அவர்களிடம், ”நான் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்?” என்றுகேட்டார்.அவர்கள் அவரை நோக்கி, நீர் அரியணையில் இருக்கும்போது எங்களுள் ஒருவர் உமது வலப்புறமும் இன்னொருவர் உமது இடப்புறமும் அமர்ந்து கொள்ள எங்களுக்கு அருளும்” என்றுவேண்டினர்.இயேசுவோ அவர்களிடம், ”நீங்கள் என்னகேட்கிறீர்கள் என உங்களுக்குத் தெரியவில்லை. நான்குடிக்கும் துன்பக் கிண்ணத்தில் உங்களால் குடிக்க இயலுமா? நான்பெறும் திருமுழுக்கை உஙகளால் பெற இயலுமா?” என்றுகேட்டார். அவர்கள் அவரிடம், ”இயலும்” என்று சொல்ல, இயேசு அவர்களைநோக்கி, ”நான் குடிக்கும் கிண்ணத்தில் நீங்கள் குடிப்பீர்கள். நான் பெறும் திருமுழுக்கையும் நீங்கள் பெறுவீர்கள்.ஆனால் என் வலப்புறத்திலும் இடப்புறத்திலும் அமரும்படி அருளுவது எனது செயல் அல்ல. மாறாக அவ்விடங்கள் யாருக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோ அவர்களுக்கே அருளப்படும்” என்று கூறினார். இதைக் கேட்டுக்கொண்டிருந்த பத்துப்பேரும் யாக்கோபுமீதும் யோவான்மீதும் கோபங்கொள்ளத் தொடங்கினர்.இயேசு அவர்களை வரவழைத்து அவர்களிடம், ”பிற இனத்தவரிடையே தலைவர்கள் எனக் கருதப்படுகிறவர்கள் மக்களை அடக்கி ஆளுகிறார்கள். அவர்களுள் பெரியவர்கள் அவர்கள் மீது தங்கள் அதிகாரத்தைக் காட்டுகிறார்கள்.ஆனால் உங்களிடையே அப்படி இருக்கக் கூடாது. உங்களுள் பெரியவராக இருக்க விரும்புகிறவர் உங்கள் தொண்டராய் இருக்கட்டும்.உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர், அனைவருக்கும் பணியாளராக இருக்கட்டும். ஏனெனில் மானிடமகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாக தம் உயிரை கொடுப்பதற்கும் வந்தார்” என்று கூறினார்.

**தியானம்:** பொதுக்காலத்தின் 29வது ஞாயிறுவார இறைவார்த்தைகள் கடவுளின் ஊழியப் பயணத்தில் எமது உள்ளாந்தர நோக்கத்தையும், எமது எதிர்பாப்புக்களையும் ஆராயும படி நம்மை அழைக்கின்றன. குறிப்பாக இன்றைய மூன்று வாசகங்களுமே துன்பத்தைப் பற்றிப் பேசுகின்றன. முதல் வாசகம் துன்புறும் ஊழியனைப் பற்றி கூறுகின்றது. எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட தலைமைக் குருவாம் இயேசுவைப பற்றி எடுத்துரைக்கின்றது. நற்செய்தி இயேசுவைப் பின்பற்றும் போது நமக்குக் கிடைப்பது பதவியும், புகழுமல்ல துன்பக்கிண்ணமே என்ற செய்தியை தருகின்றது. இந்த உலகில் உள்ள பலமதங்கள் துன்பத்தை எப்படி தவிர்ப்பது என்பதை எமக்குக் கற்றுத்தருகின்றது. ஆனால் கிறிஸ்தவமோ மீட்பையும், நிறைவையும் வெற்றி கொள்ளமுடியும் என்பதை தெளிவுபடுத்துகின்றது. எனவே தான் துன்பத்தின் மட்டில் நமது எதிர்மறையான மனப்பான்மையை சீர் தூக்கிப்பார்க்க நாம் அழைக்கப்பட்டிருக்கினம்றோம். துன்பங்களின் வழியாக இறைவன் நம்மை ஈடேற்றத்திற்து அழைத்துச் செல்கின்றார் என்ற உண்மையை உணர்ந்துகொள்வோம். நமக்குள் புதைந்து கிடக்கும் பல மேலான காரியங்கள வெளிப்பட துன்பங்கள் அவசியமாக இருக்கின்றன. எமது உள் நோக்கத்தின் தூய்மைதான் எம்மை இறைவனிடதில் கொண்டு சேர்க்கும். எமதுவாழ்க்கைப் பயணத்தில் இறைவன் அதை கண்ணோக்குகின்றார்.